**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 447/2024**

**Prosecution witness : அ.சா. 4** **Date : 02.03.2026.**

| | |
|---|---|
| **Name : செல்வி** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது மேச்சேரி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் புலன் ஆய்வு செய்த புலனாய்வு அதிகாரி திரு.மாதையன், காவல் ஆய்வாளர் தக்க சமயத்தில் சாட்சியம் அளிக்க இயலாத காரணத்தால் அவர் சார்பாக ஆவணத்தின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 19.01.2021–ம் தேதி மேச்சேரி காவல்நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் பழனிசாமி நிலையப் பொறுப்பில் இருந்த போது, சேலம் அரசு மருத்துவமனையில் இருந்தது கிடைக்கப் பெற்ற காயத்தகவலின் பேரில் மேற்படி மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த புகழேந்தி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப **நி.கு.எண்.72/2021 u/Sec. 294(பி), 324, 506(2), 379 IPC** ஆக வழக்கு பதிவு செய்தார். புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.3** முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ 4** ஆகும். இதன் அசல் புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கையை இதர நகல்களை புலனாய்வு அதிகாரி வசம் ஒப்படைத்தார்.

3. பிறகு புலன் விசாரணை அதிகாரி புலன் விசாரணை நகலை எடுத்துக்கொண்டு கடந்த 20.01.2021 ம் தேதி காலை 8.30 மணிக்கு சம்பவ இடம் மல்லிகுந்தம் டூ வேங்கானூர் சாலையில் பெரியாண்டிச்சி அம்மன் கோவில்

அருகில் சென்று சாட்சிகள் மாதேஷ் மற்றும் மனோஜ்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார். பார்வை மகஜர் மற்றும் வரைபடம் **அ.சா.ஆ 5** மற்றும் **அ.சா.ஆ 6** ஆகும்.

4. பின்பு சாட்சிகள் புகழேந்தி, பூபதி, சதீஷ்குமார், சரவணன், மாதேஷ், மனோஜ்குமார், மருத்துவர் தமயந்தி, காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் பழனிசாமி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். இவ்வழக்கில் காயமடைந்த புகழேந்தி என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் தமயந்தி ராணி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேடு பெற்றார். விபத்து பதிவேடு **அ.சா.ஆ.7** ஆகும்.

5. இவ்வழக்கின் எதிரிகள் கடந்த 04.02.2021 ம் தேதி ஆகியோர் மாண்புமிகு மாவட்ட நீதிமன்றதில் முன்ஜாமீன் பெற்றதால் கைது செய்ய மார்கமில்லை.

6. இவ்வழக்கின் புலன் விசாரணையில் எதிரிகள் மீதான குற்றம் உண்மை எனத் தெரிய வந்ததால் எதிரி மீது கடந்த 20.05.2022 ம் தேதி **நி.கு.எண்.72/2021 u/Sec. 294(பி), 324, 506(2), 379 IPC லிருந்து u/Sec. 294(பி), 324, 506(2), 326 IPC** ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தார். பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ**. 8 ஆகும்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>.

7. நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. புள்ளி விவர கணக்குக்காக போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. புலன் விசாரணை ஒரு தலைபட்சமானது என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/- தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**